அசல் வழக்கு எண்.15/2016 நாள்: 10.09.2025

வா.சா.3 திரு. கார்த்திகேயன்

சாட்சிக்கு சத்தியபிரமாணம் செய்து வைக்கப்பட்டு பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை

1) நீதிமன்றத்திலிருந்து சாட்சி சொல்ல அழைப்பாணை வந்ததா என்றால் இல்லை. வாதி எனக்கு சித்தப்பா என்பதால் நான் சாட்சியம் அளிக்க வந்துள்ளேன் என்றால் சரிதான். எனது முதல் விசாரணை வாக்குமூலம் வழக்கறிஞர் தயார் செய்ததில் நான் கையொப்பம் செய்துள்ளேன் என்றால் சரியல்ல, நான் சொல்லி தயார் செய்யப்பட்டது. வாதி என்ன பரிகாரம் கேட்டு வழக்கு தாக்கல் செய்துள்ளார் என்றால் வாதியின் மனைக்கட்டை சிவபிரகாசம் ஆக்கிரமித்துவிட்டதாக வழக்கு தாக்கல் செய்துள்ளார். வாதிக்கு அவருடைய மூதாதையர் செட்டில்மென்ட் எழுதிவைத்துள்ளார்கள் என்றால் சரிதான். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்திலுள்ள புல எண் தெரியுமா என்றால் தெரியும் பழைய புல எண்.181/1 புதிய புல எண்.275/22 இருக்கலாம்.

2) புல எண்.181/1–ன் மொத்த விஸ்தீரணம் எவ்வளவு என்றால் 3000 சதுரடிக்கு குறைவில்லாமல் இருக்கும். மேற்படி செட்டில்மென்ட் ஆவணத்தில் யார்யாருக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் 4 நபர்களுக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. சௌந்தரராஜன், ராஜமாணிக்கம், மகாலிங்கம், பரமசிவம் ஆகியோருக்கு பாகம் ஒதுக்கப்பட்டுள்ளது. மேற்படி 4 நபர்களுக்கு எந்தெந்த இன சொத்துக்கள் ஒதுக்கப்பட்டுள்ளது என்று தெரியுமா என்றால் A மற்றும் B இன சொத்துக்கள் சௌந்தரராஜன், ராஜமாணிக்கம் இருவருக்கும் ஒதுக்கப்பட்டுள்ளது. C இன சொத்து மகாலிங்கத்திற்கும், D இன சொத்து பரமசிவத்திற்கும் ஒதுக்கப்பட்டுள்ளது.

3) A, B, C, D இன சொத்துக்களில் சௌந்தரராஜனுக்கு எந்த பகுதியில் சொத்து உள்ளது என்றால் நடுபகுதியில் உள்ளது. சௌந்தரராஜனுக்கு எவ்வளவு நிலம் ஒதுக்கப்பட்டுள்ளது என்றால் ஏறத்தாழ 1000–1200 சதுரடி ஒதுக்கப்பட்டிருக்கலாம். நான் சௌந்தரராஜனுக்கு என்ன உறவுமுறை என்றால் தம்பி மகன் ஆவேன். சௌந்தரராஜனுக்கு ஒதுப்பட்ட சொத்தில் இருக்கிறாரா அல்லது வேறு இடத்தில் இருக்கிறாரா என்றால் வேறு இடத்தில் இருந்தார் பிறகு இறந்துவிட்டார். சௌாந்தரராஜனுக்கு திருமணம் நடந்ததா என்றால் ஆமாம், அவரது குடும்பம் எங்கு இருக்கிறது என்றால் சௌந்தரராஜன் மனைவி இறந்துவிட்டார், மகள்

ஈச்சங்குடியில் வாடகை வீட்டில் வசித்து வருகிறார். சௌந்தரராஜனுக்கு ஒதுக்கப்பட்ட சொத்தில் தற்போது யார் இருக்கிறார் என்றால் சௌந்தரராஜன் அவருக்கு ஒதுக்கப்பட்ட சொத்தை அவரது தம்பி ராஜமாணிக்கத்திடம் கொடுத்துவிட்டார். ராஜமாணிக்கம் அவரது சொத்துடன் சேர்த்து பரமசிவத்திடம் விற்றுவிட்டார். பரமசிவம் வேறு ஒரு நபரிடம் விற்ற சொத்தை எனது அப்பா மகாலிங்கம் வாங்கி நான் அனுபவித்து வருகிறேன்.

4) ராஜமாணிக்கத்து ஒதுக்கப்பட்டது எந்த இன சொத்து என்றால் B இன சொத்து ஆகும். அது எத்தனை சதுரடி என்றால் 1000 சதுரடி இருக்கும். A, B இன சொத்துக்களை நாங்கள் கிரையம் வாங்கியுள்ளோம் என்றால் சரிதான். A, B இன சொத்துக்களின் சர்வே எண் என்ன என்றால் சரியாக தெரியவில்லை. புலப்படத்தில் உள்ள அளவுப்படிதான் A, B இன சொத்துக்களை கிரையம் வாங்கினேனா என்றால் ஆமாம். C இன சொத்து யார் பெயரில் உள்ளது என்றால் எனது அப்பா மகாலிங்கம் பெயரில் உள்ளது. அந்த இடத்தில்தான் மடம் உள்ளது என்றால் சரிதான். எனது மூதாதையர் சொத்தை அளவை செய்யாமல்தான் பிரித்து கொண்டோம் என்றால் சரியல்ல, அளவீடு செய்துதான் பிரித்து கொண்டோம்.

5) சர்வேயர் மூலம் அளவீடு செய்யப்பட்டதா அல்லது உள்ளூர்காரர்கள் மூலம் அளவீடு செய்யப்பட்டதா என்றால் அப்போது நான் பிறக்கவில்லை, அதனால் எனக்கு தெரியாது. மூதாதையர் சொத்தை அளவீடு செய்யாமல் பிரித்து கொண்டோம் என்றாலும், புல வரைபடத்திலுள்ள அளவிற்கும் பூமியில் உள்ள அளவிற்கும் வேறுபாடு உள்ளது என்றால் சரியல்ல. பூமியில் உள்ள அளவைவிட கூடுதலாக செட்டில்மென்ட் ஆவணம் எழுதப்பட்டுள்ளது என்றால் சரியல்ல. நான் செட்டில்மென்ட் ஆவணப்படி A, B இன சொத்துக்களை கிரையம் பெற்றுள்ளேனா அல்லது புலவரைப்படத்திலுள்ள அளவுப்படி கிரையம் பெற்றுள்ளேனா என்றால் பத்திரத்திலுள்ள அளவுப்படி கிரையம் வாங்கினேன்.

6) எனது சொத்திற்கு மேற்புறம்தான் வாதியின் சொத்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்திற்கு மேற்கு பக்கம்தான் பிரதிவாதிகளுக்கு சொத்துள்ளது என்றால் சரிதான். தாவா சொத்துக்களில் பிரதிவாதிகளின் சொத்திற்கு வடக்கு பக்கம் வாதிக்கு சொத்துள்ளது என்றால் சரிதான். வாதி வழக்குரையில் குறிப்பிட்டுள்ளதுபடி பார்க்கபோனால் A இன சொத்து பிரதிவாதிகளுடைய சொத்து என்றால் சரிதான். பிரதிவாதியின் சொத்தை வாதியின் சொத்தாக வழக்குரையில்

காட்டி பரிகாரம் கேட்டுள்ளதால் பரிகாரம் கிடைக்கக் கூடியது அல்ல என்றால் சரியல்ல. பிரதிவாதி அவரது சொத்தை முறைப்படி கிரையம் வாங்கி புல வரைப்படத்திலுள்ளவாறு அளவீடுசெய்து வீடு கட்டியுள்ளார் என்றால் சரியல்ல, தவறான அளவில் வீடு கட்டியுள்ளார். தாவா B இன சொத்து தற்போது காலிமனையாக உள்ளது என்றால் சரிதான்.

7) மேற்படி காலிமனையை அளவீடு செய்தபோது புலவரைப்படத்தில் என்ன அளவு உள்ளதோ அதே அளவுப்படிதான் தாவா B இன சொத்து உள்ளது என்றால் சரியல்ல. பிரதிவாதி தாவா சொத்தை ஆக்கிரமிப்பு செய்துள்ளார் என வட்டாட்சியருக்கோ, கோட்டாட்சியருக்கோ, திருவையாறு காவல் நிலையத்திற்கோ புகார் கொடுக்கவில்லை என்றால் சரிதான். நிலஅளவையர் மூலம் இரண்டுமுறை அளந்து பார்த்துதான் ஆக்கிரமிப்பு கண்டுபிடித்தோம் அதை பிரதிவாதிகள் ஒப்புக்கொள்ளவில்லை. நாங்கள் அளவீடு செய்ததற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளோமா என்றால் அதுபற்றி எனக்கு தெரியாது. புல வரைப்படத்தில் அளவு குறைவாக உள்ளது என்று வட்டாட்சியருக்கோ, கோட்டாட்சியருக்கோ, மாவட்ட ஆட்சியருக்கோ புகார் கொடுத்துள்ளோமா என்றால் எனது சித்தப்பா கொடுத்தாரா என்று எனக்கு தெரியாது.

8) எனது மூதாதையர் எழுதிவைத்த செட்டில்மென்ட் ஆவணத்திலுள்ள விஸ்தீரணம் அதிகமாக உள்ளது என்றும், அரசு புலசுவடியில் உள்ள அளவுதான் சரியான விஸ்தீரணம் என்றும், வாதி எனது சித்தப்பா என்பதால் அவருக்கு ஆதரவாக பொய்சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல. பிரதிவாதி அவருடைய சொத்தில்தான் வீடு கட்டி குடியிருந்து வருகிறார் என்பதால் பொறாமையில் இந்த வழக்கினை எனது சித்தப்பா தாக்கல் செய்துள்ளார் என்றால் சரியல்ல.

ம.வி : இல்லை.

Sd/ - Karthikeyan

Taken down by me in the open court read over to the witness and admitted by him to be correct.

PANCHANATHAN RAMESH

Digitally signed by PANCHANATHAN RAMESH
Date: 2025.09.10 19:37:28 +0530

DISTRICT MUNSIF, THIRUVAIYARU